## Deposition of Witness
**(Chapter XXXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No.258 /2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : LW5 / PW4 |
| Name | : இளங்கோ |
| Father Name/Husband Name | : வைத்தியலிங்கம் |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 28.07.2022 நாளாகிய இன்று திரு. ஜி. இரகோத்தமன், M.A.,L.L.B., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதன்மை விசாரணை</u>

நான் தற்போது சாமியார்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் மீன்பிடிக்கும் தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சுரேஷ் என்பவரை எனக்கு தெரியும். 19.01.2015ம் தேதி காலை சுரேஷ் அவரது வீட்டிலிருந்து இருசக்கர வாகனத்தில் கடலூர் ஆற்றுத்திருவிழாவிற்கு சென்றுவிட்டு மீண்டும் வீட்டிற்கு வருவதற்காக கடலூர் - சிதம்பரம் ரோட்டில் மோகினி பாலம் அருகே கிருஷ்ணா Fly wood கடை முன்பாக மதியம் 03.00 மணியளவில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரும்போது அதே திசைக்கு எதிர் திசையில் வந்த சுவராஜ் மஸ்தா என்ற வாகனத்தை ஓட்டிவ ந்த நபர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் சுரேஷ் ஓட்டி வந்த இருக்கர வாகனத்தில் மோதியதால் அவர் தூக்கி எறியப்பட்டு அவருக்கு பலத்த அடிப்பட்டு காதில் ரத்தம் வந்தது. இந்த சம்பவத்தை பார்த்த அங்கிருந்த சசிக்குமார், மகேந்திரன் ஆகியோர் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கடலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். சுரேஷின் அப்பா எனக்கு போன் செய்து தகவல் சொன்னதால் நான் கேள்விப்பட்டு நான் மருத்துவமனைக்கு சென்றபோது சுரேஷை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வரும்வழியில் இறந்துவிட்டதாக எங்களிடம் தகவல் கூறினார். இறந்த பிரேதத்தின் மீது போலிசார் பிரேத விசாரணை செய்தபோது நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அடிப்பட்ட சம்பவத்தை கேள்விப்பட்டவுடன் நானும், சுரேஷின் தந்தை ஆகியோர் காவல் நிலையம் சென்றோம் என்றால் ஆமாம். அன்றைய தினம் போலிசார் என்னிடம் கையொப்பம் பெறவில்லை. மறுநாள் கையொப்பம் காவல் நிலையத்தில் என்னிடம் வாங்கினார்கள். நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு மருத்துவமனையில் கையொப்பம் செய்ததாக சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.